**தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்தினால் மீண்டெழும் செவினங்களுக்காக மாத்திரம் ரூபா 49.20 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 47.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 1.76 மில்லியன் அல்லது 3.58 சதவீதமாகக் காணப்பட்டது.

**2.2 வருமானக் கணக்குகள்**

---

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

---

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக இரண்டு வருமான குறியீடுகளுக்காக ரூபா 155.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு

செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 189.58 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 122.31 சதவீதமாகும். விபரம் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | | | மிகை மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியானவருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.10 | 140.00 | 169.01 | 29.01 | 20.72 |
| 20.03.02.12 | 15.00 | 20.57 | 5.57 | 37.13 |
| **மொத்தம்** | **155.00** | **189.58** | **34.58** | **22.31** |

**2.3 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்குரிய 29701 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமானங்கள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவுமீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 29701 | 5.04 | 3.89 | 2.84 | 3.59 | 20.00 | 12.11 |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த

முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 வருமானக் கணக்கு

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 02 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளை தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடுகளுக்கு உரியதாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) 20.03.02.10 ஆம் இலக்க வருமானக் குறியீடு - கம்பனிகள் பதிவாளரின் கட்டணங்கள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம், ரூபா 209.41 மில்லியன் வருமானம் நிலுவையாக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 73.88 மில்லியன் ஆகும். நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

#### (ஆ) 20.03.02.12 ஆம் இலக்க வருமானக் குறியீடு – பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்கள்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம், ரூபா 20.00 மில்லியன் தொகையான வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 15.00 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 20.57 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலுமானதாக இந்தது. மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்க முடியுமாக இருந்த போதிலும், அதற்காக திணைக்களத்தால் சரியாக வருமானத்தை எதிர்வுகூற முடியாது போனமையால் அந்த மதிப்பிடப்பட்ட வருமானம் திருத்தப்பட்டிருந்தது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

29701 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 137,741 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 27 வருடங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் திறைசேரியின் புத்தகத்தில் படியான கடன் மீதிகளிடையே ரூபா 3,665 ஆன வேறுபாடொன்று நிலவியது. அந்த வேறுபாட்டினை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனிகள் பதிவானர் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கட்டிடத்தினை புதுப்பிக்கும் போது கழற்றி அகற்றப்பட்ட கண்ணாடிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி இடம்பெற்ற ஏலத்திற்கேனும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சுமார் மூன்று வருடங்களுக்கு அண்மிய காலமாக கண்ணாடிகள் பாதகாப்பற்ற முறையில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன.

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை** | |
| (அ) 5.2.1 (அ) வழிகாட்டல் | விலைக்கேள்வி கோருவதற்கு பதிலளிப்பதற்கு தேவையான அனைத்து தகவல்களும் விலைக்கோரல் ஆவணங்களின் மூலம் வழங்கப்பட வேண்டுமெனினும், அந்த ஏற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் விலைக்கேள்வி கோரல் ஆவணங்கள் முழுமையற்றதாக காணப்பட்டது. |
| (ஆ) 5.3.11 (அ) வழிகாட்டி | விலைக்கேள்வி கோரும் போது விலைக்கேள்வி பிணைப்பொறுப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 5.4.8 (அ) வழிகாட்டி | ஒப்பந்தத்தை கையளிக்கும் போது செயலாற்றல் பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3.6 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் ஆகியவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருந்த பணிகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செயற்பாடு | எண்ணிக்கை 2015 | எண்ணிக்கை 2014 | வேறுபாடு (குறைவு)/ அதிகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|
| **கம்பனியின் வருடாந்த அறிக்கைகளை பதிவு செய்தல்** | | | | |
| கம்பனிகளின் எண்ணிக்கை | 41,199 | 31,305 | 9,894 | 31.61 |
| வருமானம் ரூபா | 206,005,000 | 156,525,000 | 49,480,000 | 31.61 |
| **நிதிக்கூற்றுக்களை பதிவு செய்தல்** | | | | |
| கம்பனிகளின் எண்ணிக்கை | 2,509 | 2,376 | 133 | 5.60 |
| வருமானம் ரூபா | 2,509,000 | 2,376,000 | 133,000 | 5.60 |
| **புதிய கம்பனிகளை பதிவு செய்தல்** | | | | |
| கம்பனிகளின் எண்ணிக்கை | 8,361 | 7,100 | 1,261 | 17.76 |
| வருமானம் ரூபா | 128,895,000 | 109,435,000 | 19,460,000 | 17.78 |

| | | | | |
|---|---|---|---|---|
| **கணக்குகளின் பரிசீலனை பதிவினை புதுப்பித்தல்** | | | | |
| ------------------------------------------------ | | | | |
| கணக்கு பரிசோதகர்கள்/ கணக்கு பரிசோதனை கம்பனிகளின் எண்ணிக்கை | 406 | 532 | (126) | (23.68) |
| வருமானம் ரூபா | 1,267,748 | 927,632 | 340,116 | 36.66 |
| **கம்பனி செயலாளர்களை பதிவு செய்தல்** | | | | |
| ------------------------------------------------ | | | | |
| செயலாளர்கள் / செயலக கம்பனிகளின் எண்ணிக்கை | 565 | 566 | (1) | (0.18) |
| வருமானம் ரூபா | 1,465,000 | 1,462,500 | (2,500) | (0.17) |
| **சான்றுப்படுத்திய பிரதிகளை வழங்குதல்** | | | | |
| ------------------------------------------------ | | | | |
| பிரதிகளின் எண்ணிக்கை | 51,207 | 43,379 | 7,828 | 18.05 |
| வருமானம் ரூபா | 26,279,380 | 22,795,784 | 3,483,596 | 15.28 |
| **கம்பனி கோவைகளை பரிசோதனை செய்தல்** | | | | |
| ------------------------------------------------ | | | | |
| கம்பனி கோவைகளின் எண்ணிக்கை | 12,066 | 10,838 | 1,228 | 11.33 |
| வருமானம் ரூபா | 6,033,040 | 5,420,090 | 612,950 | 11.31 |
| **சங்கங்களின் வருடாந்த அறிக்கைகளை கோவைப்படுத்தல்** | | | | |
| ------------------------------------------------ | | | | |
| சங்கங்களின் எண்ணிக்கை | 31 | 19 | 12 | 63.16 |
| வருமானம் ரூபா | 31,000 | 19,000 | 12,000 | 63.16 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஒவ்வொரு கம்பனியாலும் செலுத்த வேண்டிய வருடாந்த அறிக்கை வருமானத்தில் மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 205,995,000 ஆக இருந்தது. அவ்வாறே 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 628,239,996 ஆக இருந்ததுடன் அது 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை முன்கொண்டவரப்பட்டிருந்தது.

**(ஆ) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம்**

கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கம்பனிகளை பதிவு செய்தல் மற்றும் அதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பணிகள் வழிநடத்தப்பட வேண்டும். அந்த கம்பனிகள் அவ்வாறு செயற்படுதனை உறுதிபடுத்திக்கொள்ளலும், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் செயற்பட்டு பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் செயற்பாடுகளை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வழிநடத்திச் செல்லலும் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான பணியொன்றாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பணிகளின் கண்காணிப்பு நலிவான நிலையில் காணப்பட்டதாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் பதிவு செய்திருந்த போதிலும் தற்போது செயற்பாடற்ற நிலையில் காணப்படும் கம்பனிகள் தொடர்பில் முறையான வேலைத்திட்டமொன்று திணைகளத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

**(இ) 1891 இன் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைகள் சட்டம்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் 12,311 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 11,750 சங்கங்கள் வருடாந்த அறிக்கைகளை கோவைப்படுத்த வேண்டியிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருடாந்த அறிக்கைகளை கோவைப்படுத்தி பதிவு செய்திருந்த சங்கங்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன், அறவிடப்பட்ட வருமானம் அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் 0.26 சதவீதம் மாத்திரமேயாகும்.

**(ஈ) 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டம்**

1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டத்தின் ஏற்படுகளின் பிரகாரம் ரூபா 5,000,000 இனை விஞ்சும் எந்தவொரு பொது ஒப்பந்தமும் கம்பனிகள் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மீளாய்வாண்டில் 12,217 பொது ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 20,568,000 ஆகும். முன்னைய வருடத்தில் அந்த என்னிக்கை 10,387 ஆக இருந்ததுடன், அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 17,016,000 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 29 சதவீத அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது.

## 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2007 மார்ச் 29 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் வணிக மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சினால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு சொந்தமான பங்குகளை கொள்வனவு செய்வதற்காக கம்பனிகள் நிதியத்திலிருந்து ரூபா 90,275,000 செலவிடப்பட்டிருந்தது. இந்த கம்பனி 2013 ஆம் ஆண்டு முதல் நட்டமடைந்திருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததெனினும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்துவ செயற்திறனின்மை**

கம்பனிகளை பதிவு செய்யும் நடைமுறையினை கணனிமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2014 சனவரி 21 ஆந் திகதி ரூபா 88,812,228 இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணையொன்றினை பெற்றுக்கொள்ளாமல் கையளிக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 13,619,577 தொகை திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. பின்னர் 2015 யூலை 29 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் கூறுவிலைகள் கோரப்பட்டு இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 05 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 123 | 76 | 47 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 21 | 03 | - |
| (v) | ஏனையவை (அமைய) | - | 01 | - | 01 |
| | **மொத்தம்** | **161** | **105** | **57** | **01** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பதவியான “ கம்பனிகள் பதிவாளர் நாயகம் ” பதவி 2015 மே 08 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அதற்காக நிரந்தர உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) நிறுவனத்தின் ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக குறிப்பானதொரு வேலைத்திட்டமொன்று இல்லாதிருந்தமையால் அதற்காக கம்பனிகள் நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 90 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.